2953

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - 6
### வரலாறு I

| தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 1 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) வரலாறு என்பது சமூக வகுப்பு போராட்டங்களால் உருவாகுவது என கூறியவர்
1. E. H கார் 2. அரிஸ்ரோட்டில் 3. கால்மார்க்ஸ் 4. ஸ்டுவர்ட்டிகொட்

02) கி. பி 640 இல் இந்தியாவுக்கு விஜயம் செய்த சீன தேச சஞ்சாரி
1. ஹியூங் சாங் 2. பாகியன் 3. மெகஸ் தனிஸ் 4. சென்லூ

03) நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் வருமானம் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரைக்குரியது எனக் குறிப்பிடும் கல்வெட்டு
1. கொடவாயதூண் கல்வெட்டு 2. சித்துல்பவ்வ கல்வெட்டு
3. பெரிமியன் கல்வெட்டு 4. பதுளை தூண் கல்வெட்டு

04) இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ள கோகண்ண துறைமுகத்தினூடாக தரையிறங்கிய ஆரிய குழுவினர்.
1. பண்டுவாசுதேவன் குழுவினர் 2. மதுராபுரி இளவரசி குழுவினர்
3. பத்தகச்சானா குழுவினர் 4. பிக்குணி சங்கமித்தா குழுவினர்

05) ரிதிபந்தி கால்வாய் ஊடாக நீரைப் பெற்றுக் கொள்ளும் குளம்
1. மாகல்ல குளம் 2. தப்போ வாவி
2. மகாவிலாச்சிய 4. அபயவாவி

06) முழுநாட்டையும் ஒன்றுபடுத்தி ஒரு ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரும் துட்டகைமுனுவின் வேலைத்திட்டம் நிறை வேறுவதற்கு தூரநோக்குடன் அடித்தளத்தை உருவாக்கியவர்.
1. பௌத்த பிக்குமார் 2. சத்தாதிஸ்ஸ இளவரசன்
3. கவன்திஸ்ஸ மன்னன் 4. விகாரமகா தேவி

07) கோணநதியின் ஆற்றுமுகத்தில் அமைந்திருந்த பண்டைய துறைமுகம்
1. உருவெல 2. மகாதித்த 3. கொடவாயா 4. கோகண்ண

08) A - பிரதேச ஆட்சியாளருக்கென்று தனிப்பட்ட படையினர் காணப்படுதல்
B - வர்த்தகம் வளர்ச்சி அடைதல்
C - நாடுகாண் பயணங்கள் விருத்தியடைதல்
D - நீதிமன்ற நடவடிக்கைகள் பிரபுக்களுக்கு உரித்தானதாக இருத்தல்
மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களில் ஐரோப்பாவின் நிலமானிய முறை வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
1. AB 2. AD 3. BC 4. CD

09) நிரல் X இல் குளத்தின் கூறுகள் தரப்பட்டுள்ளன. இவற்றை Y இல் தரப்பட்டுள்ள அதன் செயற்பாடுகளுடன் இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| X | | Y | |
|---|---|---|---|
| i) | வான்கதவு | A | - குளக்கட்டு அரிப்பெடுக்காமல் பாதுகாத்தல் |
| ii) | உள்வான்கதவு | B | - வெளியிலிருந்து குளத்துக்கு நீரைக் கொண்டு செல்லல் |
| iii) | கலிங்கல் | C | - மேலதிக நீரை வெளியேற்றல் |
| iv) | அலைதாங்கி | D | - குளத்தின் வண்டலும் சேறும் படிவதைத் தடுத்தல் |
| | | E | - தேவையான போது நீரைப் பெற்றுக்கொள்ள |

1. CBED 2. CDAB 3. DCEA 4. CBEA

10) * திம்புலாகல மகா காசியப்பதேரரின் தலைமையில் உயர் நீதிமன்ற சபையொன்றை ஏற்படுத்தல்

* ஒழுக்கமற்ற பிக்குகளின் காவியுடையை மாற்றுதல்

* குறிப்பிட்ட சிரேஷ்டநிலை (மஹதெனு) பிக்குகளை இளம்பிக்குவாக (சாமனேரி) நிலைப்படுத்தல்

மேலே குறிப்பிட்டுள்ள தொடர் நிகழ்வுகள் இடம்பெற்ற காலத்தில் ஆட்சி செய்த மன்னன்

1. மகா பராக்கிரமபாகு
2. II ஆம் பராக்கிரமபாகு
3. மகாசேனன்
4. III ஆம் விஜயபாகு

11) சத்மஹால் பிரசாதய என்ற ஏழடுக்கு மாளிகை காணப்பட்ட இராசதானி

1. பொலநறுவை
2. அநுராதபுரம்
3. தம்பதெனியா
4. யாப்பகூவ

12) கலிங்கமாகனை இலங்கையிலிருந்து விரட்டிய தம்பதெனியா ஆட்சியாளன்

1. 3ம் விஜயபாகு
2. 4ம் பராக்கிரமபாகு
3. 2ம் விஜயபாகு
4. 2ம் பராக்கிரமபாகு

13) சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்படுவது கோட்டை காலமாகும். பின்வரும் நூல்களில் அக்காலத்துக்கு மட்டும் உரிய நூல்களைத் தெரிவு செய்க.

1. காவியசேகர, சல்லிஹினி சந்தேசய, குத்திலகாவிய, லோவடசங்கராவ
2. குத்திலகாவிய, சல்லிஹினி சந்தேசய, மயுரசந்தேசய, நிசாயசங்கிரகய
3. சல்லிஹினி சந்தேசய, திசாரசந்தேசய, விருத்தியசங்கிரகய, குத்திலகாவிய
4. குத்திலகாவிய, தலாதாசிரித, அதாகதவங்கசய, மயுரசந்தேசய

14) பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ஒழுங்கின்படி எழுதும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி

A. யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளராக சப்புமல்குமாரயா நியமிக்கப்படல்

B. கலிங்கமாகன் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்படல்

C. திசங்க அழகுக்கோனரை ஆரியச் சக்கரவர்த்தி தோற்கடித்தல்

D. பராக்கிரமபாகு மன்னன் பாண்டி நாட்டுக்குச் சென்று தந்ததாதுவையும் பாத்திரதாதுவையும் எடுத்து வருதல்

1. ACDB
2. ADCB
3. BDCA
4. BACD

15) முஸ்லிம்களின் ஆக்கிரமிப்புக்கு முதன் முதல் உள்வாங்கிய இந்தியாவின் பிரதேசம்

1. முல்தான் சிந்து பிரதேசம்
2. பெசாவோர் பிரதேசம்
3. டில்லி பிரதேசம்
4. கனொஜ் பிரதேசம்

16) ஒரு முஸ்லீமாக இருந்த போதிலும் சமய சகிப்புத் தன்மையை மக்களுக்கு வழங்கிய ஆட்சியாளர்

1. பாபூர்
2. ஹீமாயூன்
3. மகா அக்பர்
4. ஜகான்கீர்

17) இங்கிலாந்தின் வெஸ்ற் மினிஸ்ரர் பாராளுமன்ற முறையை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய முதல் சந்தர்ப்பம் சட்டவாக்க கழகமாகும். சட்டவாக்கக் கழகம் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தம்

1. கோல்புறூக்
2. மக்கலம்
3. டொனமூர்
4. சோல்பரி

18) இலங்கையில் ஆளுநர் நாயகம் பதவிக்கு முதன் முதலில் நியமிக்கப்பட்டவர்

1. பிரட்ரிக் நோர்த்
2. றொபட் பிரௌண்றிக்
3. டொனமூர் பிரபு
4. சோல்பரிப் பிரபு

19) சட்டவாக்க கழகத்திற்கு முதலில் தெளிவான தமிழர்

1. பொன்னம்பலம் இராமநாதன்
2. பொன்னம்பலம் அருணாச்சலம்
3. ஜீ. ஜீ. பொன்னம்பலம்
4. ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி

20) இந்தியாவிற்கு ஆயுதப் போராட்டம் மூலம் சுதந்திரத்தைப் பெற போராடியவர்

1. மகாத்மாகாந்தி
2. சுரேந்திரநாரத் பானர்ஜீ
3. சுபாஷ்சந்திரபோஸ்
4. இந்திராகாந்தி

21) இந்திய வரலாலற்றில் சில முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் நிரல் I இலும் அவற்றுடன் தொடர்புபட்ட அரசர்கள் நிரல் II இலும் உள்ளன. நிரல் I இற்கேற்ப நிரல் II ஐத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i) திருமணத் தொடர்புகளின் மூலம் மதத்தின் அதிகாரம் விரிவடைதல் | A - கனிஷ்கன் |
| ii) மதத்தின் தலைநகரை பாடலிபுத்திர நகரத்திற்கு மாற்றுதல் | B - பிம்பிசாரன் |
| iii) தர்ம மகாமாத்திரர்களை நியமித்தல் | C - தர்ம அசோகன் |
| iv) நான்காம் தர்மசங்கத்திற்கு அனுசரனை அளித்தல் | D - அஜாசத்தன் |
| | E - சந்திரகுப்தன் |

1. BCDA 2. BDCA 3. EBCD 4. DBCA

22) டொகுகாவா சோகுன் காலத்தில் ஜப்பானில் மூடிய கொள்கை பின்பற்றப்படக் காரணம்
1. அமெரிக்காவின் ஆதிக்கம் ஏற்பட்டதால்
2. தமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு
3. மேஜிஜி சீர்திருத்தம் ஏற்பட்டதால்
4. கிறிஸ்தவ மதப் பரவலால் கலாசார தாக்கம் ஏற்பட்டதால்

23) சீனாவில் பிரதான மதங்கள் மூன்று பரவியுள்ளன. இதில் பௌத்த மதம் பரவியது தொடர்பான கருத்தைத் தெரிவிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1. நந்தி எனும் குரு பரப்பியதாக 2. தேவராச எனும் பிக்குனி பரப்பியதாக
3. கொன்பியுசியஸ் பரப்பியதாக 4. காசியாபமானங்க பிக்கு பரப்பியதாக

24) சீனாவில் வெற்றிகரமான புரட்சியாளர்கள் விவசாயிகளே. இக் கருத்துடன் தொடர்புடையவர்
1. சுன்யாத் - சென் 2. சியாங்கை - ஷெக் 3. மாவோசே-துங் 4. சோ என் - லாய்

25) "இராப்போசன விருந்து" என்னும் புகழ் வாய்ந்த ஓவியத்தைத் தீட்டிய கலைஞர்
1. லியானோடாவின்சி 2. கெப்லர் 3. மைக்கல் ஏஞ்சலோ 4. இராப்பேல்

26) வானியலின் தந்தை என அழைக்கப்பட்டவர்
1. கெப்லர் 2. கொப்பனிக்கஸ் 3. மகலன் 4. கலிலியோகலிலி

27) நாடுகாண் பிரயாணங்களில் முதலில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடு
1. போர்த்துக்கல் 2. ஸ்பெயின் 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து

28) ஐரோப்பாவில் உருவான முதலாவது தேசிய அரசு
1. இங்கிலாந்து 2. ஒல்லாந்து 3. ஸ்பானியா 4. போர்த்துக்கல்

29) போர்த்துக்கேயர் வருகையின் போது கோட்டை இராசதானியின் மன்னன்
1. விஜயபாகு 2. தர்மபராக்கிரமபாகு 3. 8ம் வீரபராக்கிரமபாகு 4. புவனேகபாகு

30) ஒல்லாந்தருக்கும் 2ம் இராஜசிங்கனிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை
1. மல்வானை ஒப்பந்தம் 2. வெஸ்ரவோல்ட் உடன்படிக்கை
3. கண்டிய உடன்படிக்கை 4. மக்னாகாட்டா உடன்படிக்கை

31) நிரல் "அ" வை நிரல் "ஆ" வுடன் தொடர்புபடுத்தும் போது பெறப்படும். சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| i) துணிநெய்யும் கருவி | A - ஜோர்ஜ் ஸ்டீவன்சன்ஸ் |
| ii) புகையிரத எஞ்சின் | B - அலெக்ஸ்சாண்டர் கிரஹம்பெல் |
| iii) மோட்டார் வாகனம் | C - ஜோன் கே |
| iv) தொலைபேசி | D - டெய்மலர் |

1. ACBD 2. BDAC 3. CADB 4. DCAB

32) நிலக்கரிச் சுரங்கத்தினுள் பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பான விளக்கை கண்டறிந்தவர்

1. ஹம்ப்றிடேவி 2. பெரிமாடின்ஸ் 3. ஹென்றிகொட் 4. நிவ்கோமான்

33) கைத்தொழில்புரட்சி முதலில் தோன்றிய நாடு

1. சீனா 2. ஜேர்மனி 3. இங்கிலாந்து 4. இத்தாலி

34) ரஷ்யப் புரட்சியின் பிதாமகராகக் கருதப்படுபவர்

1. ஸ்டாலின் 2. ஸ்ட்ரொங்கி 3. லெனின் 4. மகாபீட்டர்

35) இத்தாலியை ஐக்கியப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்த காபோனாரி இயக்கத்தை கட்டியெழுப்பியவர்

1. கவூர் 2. கரிபால்டி 3. மெஸினி 4. மெட்டர்நிக்

36) சிலுவைப் போருடன் தொடர்புடைய நிகழ்வு

1. கிறிஸ்தவர்களின் புனித பூமியைத் துருக்கியர் கைப்பற்றல்
2. ஜேர்மனியில் கத்தோலிக்கர்களுக்கும் மறுப்பாளர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்
3. ஜெருசலேம் தொடர்பாக கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே நடைபெற்ற போர்கள்
4. யாத்திரையில் சென்ற ரோமன் கத்தோலிக்கர்களை பாலஸ்தீனத்தில் இம்சைப்படுத்தல்

37) "சரஜிவோ" சம்பவத்துடன் தொடர்புடைய யுத்தம்

1. 1ம் உலோகப் போர் 2. இந்திய சுதந்திரப்போர்
3. 2ம் உலோகப் போர் 4. பிரான்சியப் போர்

38) சர்வதேச சங்கம் உருவாக முன்னின்று உழைத்தவர்

1. வோஷிங்டன் 2. வூட்றோ வில்சன் 3. வின்சன் சேர்ச்சில் 4. ரூறுமன்

39) உலகில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரித்தாக வேண்டிய வசதிகளையும் வளங்களையும் வழங்குவதன் பொருட்டு உருவான நிறுவனம்

1. UNFPA 2. UNDP 3. UNICEF 4. UNHCR

40) 2ம் உலக யுத்தத்தின் பின்னர் உலக சமாதானத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு

1. சர்வதேச சங்கம் 2. வார்சோ அமைப்பு
3. ஐக்கிய நாடுகள் சபை 4. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

(40 x 2 = 80 புள்ளிகள்)

2978

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - 6
## வரலாறு II

| தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

- பகுதி 1 இல் 1ம் வினா கட்டாயமானது.
- பகுதி 2 இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி 3 இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி - I

01) (அ) (i) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

1. ஜம்புகோளபட்டுன
2. இரணைமடுக்குளம்
3. கோணநதி
4. யாப்பகூவ
5. கடலாதெனிய
6. கங்காசிறிபுர
7. மகாதீத்த
8. புலஸ்திநகரம்
9. செங்கடகல
10. நயினாதீவு

(10 புள்ளிகள்)

(ii) உமக்கு வழங்கப்பட்ட உலகப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

1. செங்கடல்
2. சோழநாடு
3. பாலாறு
4. கிறுஸ்மஸ் தீவு
5. மகலன் தொடுகடல்
6. போர்த்துக்கல்
7. கள்ளிக்கோட்டை
8. யப்பான்

(8 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D யினால் காட்டப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய நபர்கள் யார் என்பதை அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

A. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி

B. "கலிகால சாகித்ய சர்வஞ்ஞ பண்டித்" என்ற பட்டத்தினால் அழைக்கப்பட்ட மன்னன்

C. மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தை என போற்றப்படுபவர்

D. விவசாயிகளின் கிளர்ச்சி என அழைக்கப்பட்ட போராட்டம்

(2ம் பராக்கிரமபாகு, 1ம் சுதந்திரப் போராட்டம், ஆதர்வீதியெஸ், 2ம் சுதந்திரப் போராட்டம், ஜே. ஆர். ஜவர்த்தனா, சேர். வில்லியம் கோபல்லாவ, 1ம் இராஜசிங்கன்)

(4 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள நிர்மானங்களின் பெயர்களை A, B, C, D என்ற ஒழுங்கு முறையில் எழுதுக.

(A)



(B)



(C)



(D)



(iii) கீழே A, B, C, D என்ற குறியீடுகளினால் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

A. தாந்தே, பெட்ராக், பொக்காசிபோ வாழ்ந்த நாடு எது?

B. ஒருவரின் உடல் எனக்கு சமமாக வழங்கப்படும் துலாபாரம் என்ற பெயரிலான தானத்தை வருடாந்தம் வழங்கி வந்த மன்னன் யார்?

C. ஐக்கிய தேசியக்கட்சியின் ஸ்தாபகர் யார்?

D. 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு எது?

## பகுதி - II

02)

1. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகால தகவல் கிடைக்கும் இடங்கள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2. நதிக்கரைகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட குடியேற்ற கிராமங்கள் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது. அவற்றில் சரியான விடையை தெரிவு செய்து எழுதுக.
   (விஜிதகம, அநுராதகம, மகாகம, விஜிதபுரகம)
   A. மல்வத்து ஓயா -
   B. கலாஓயா -
   C. மகாவலிகங்கை -
   D. கிரிந்தி ஓயா - (4 புள்ளிகள்)

3. இலங்கையில் ஆரியரின் பொருளாதார முறைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. பண்டுகாபய அரசன் காலத்தின் முக்கியத்துவத்தை இரு காரணிகளைக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

03)

1. பின்வரும் குளங்களை நிர்மானிப்பதில் பங்களிப்பு செய்த மன்னர்களை A, B, C என்ற ஒழுங்கில் பெயரிடுக.
   A. பசவக்குளம்
   B. மின்னேரியாக குளம்
   C. கந்தளாய்க்குளம் (3 புள்ளிகள்)

2. இராசரட்டைப் பிரதேசத்துக்கு நீரப்பாசன முறையின் அவசியத்தில் செல்வாக்கு செலுத்திய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3. இராசரட்டையின் நீர்ப்பாசன நடவடிக்கைகளின் போது பௌதிக தரைத்தோற்ற அமைப்பினைக் கருத்திற் கொண்டு செயற்பட்டுள்ளனர் என்பதை இரு காரணிகளின் உதவியுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

4. நீர்வள நாகரிகத்தின் நிர்வாகமுறை பிரிக்கப்பட்டிருந்த மூன்று பிரிவுகளையும் பெயரிட்டு, அவற்றின் செயற்பாடுகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

04)

1. பின்வரும் பிரதேசங்களை ஆட்சி செய்தவர்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
   (3ம் விஜயபாகு, புவனேகபாகு, சுபதளபதி, சங்கதளபதி)
   A. யாப்பகூவ
   B. மினிப்பே
   C. தம்பதெனியா (3 புள்ளிகள்)

2. தம்பதெனியா யுகத்தின் ஆட்சியாளனான 2ம் பராக்கிரமபாகுவின் சேவைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

3. 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை இந்நாட்டின் சிற்பக்கலை கட்டிடக்கலைகளில் காணக்கூடியதாகவுள்ள இயல்புகளை இரு உதாரணங்கள் தந்து விளக்குக. (5 புள்ளிகள்)

4. இராஜரட்டையில் இருந்து தென்மேற்கு நோக்கி தலைவர்கள் புலம்பெயர்ந்ததோடு பொருளாதாரக் கோலமும் மாறிய விதத்தை மூன்று விடயங்களைக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05)

1. பின்வரும் ஐரோப்பிய நாட்டவர்களின் கீழைத்தேய மத்திய நிலையங்களை A, B, C என்ற ஒழுங்கில் தருக.
   - A. போர்த்துக்கேயர்
   - B. ஒல்லாந்தர்
   - C. ஆங்கிலேயர்

   (3 புள்ளிகள்)
2. பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.
   - A. போர்த்துக்கேயர் இலங்கையில் முதலில் தரையிறங்கிய இடம்
   - B. ரோமன் டச்சுச்சட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர்கள்
   - C. ஆசிய நாடொன்றில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்த போர் நடந்த இடம்
   - D. கி. பி. 1766 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மன்னன்.

   (4 புள்ளிகள்)
3. இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களில் போர்த்துக்கேய அதிகாரத்தை முற்றாக ஒழிப்பதற்கு கோட்டை ஆட்சியாளருக்கும் சீதாவாக்கை ஆட்சியாளருக்கும் ஏன் முடியாமல் இருந்தது என்பதை இரு விடயங்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடியாமைக்கான காரணத்தை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

   (6 புள்ளிகள்)

06)

1. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கிராமிய விவசாய அபிவிருத்திக்காக நீர்ப்பாசன வசதிகளைப் புனரமைத்த மூன்று ஆள்பதிகளைப் பின்வரும் பட்டியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
   (எட்வேட்பாண்ஸ், ஹோர்குலிஸ் றொபின்சன், தோமஸ் மெயிற்லண்ட், வெஸ்ற் றிச்வே, விலியம்கிரகரி)

   (3 புள்ளிகள்)
2. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களுக்கிடையே தொடர்புகளை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

   (4 புள்ளிகள்)
3. கி. பி. 1848 இற்குப் பின்னர் தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்காகப் பிரித்தானிய அரசாங்கம் ஏன் விசேட கவனத்தைச் செலுத்தியது என்பதை இரு விடயங்களைக் கொண்டு விளக்குக.

   (5 புள்ளிகள்)
4. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை ஏற்பட்டதால் எங்களுக்கு அனுகூலமான சந்தர்ப்பம் ஒன்றையும் பிரதிகூலமான சந்தர்ப்பம் ஒன்றையும் விளக்குக.

   (6 புள்ளிகள்)

## பகுதி - III

07)

1. வைதீக காலத்தில் ஆரியர்களிடையே நிலவிய குலப் பிரிவுகள் மூன்றின் பெயர் தருக.

   (3 புள்ளிகள்)
2. மகத இராச்சியத்தின் எழுச்சிக்கான காரணிகள் நான்கை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. அசோகச் சக்கரவர்த்தியின் சமயப் பணிகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)
4. வைதீகக் காலத்தில் இருந்த இந்திய மக்களின் வாழ்க்கையை பொருளாதாரம், சமூக ஒருங்கமைப்பு எனும் துறையின் கீழ் விளக்குக.

   (6 புள்ளிகள்)

08)

1. பௌத்தசமயம் பரவிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

   (3 புள்ளிகள்)
2. டில்லி சுல்தானின் பேரரசு காலத்துடன் தொடர்பான பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொறுப்பான அரச வம்சங்கள் A, B, C, D எனும் ஒழுங்கில் எழுதுக.

   (4 புள்ளிகள்)
3. மொகலாய பேரரசில் சொந்த அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு மகா அக்பர் அரசர் பின்பற்றிய இரு நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

   (5 புள்ளிகள்)

4. இந்தியாவின் பலம் வாய்ந்ததாக இருந்த விஜயநகர் இந்துப் பேரரசு பற்றிப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் சுருக்கமாக விபரிக்க.
   A. அமைவு
   B. முக்கிய ஆட்சியாளர்
   C. ஆற்றியசேவை (6 புள்ளிகள்)

09)
1. நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட ஐரோப்பியர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பிப்பதற்கு பின்னணியாய் அமைந்த இரு காரணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. போக்குவரத்துத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் கைத்தொழில் புரட்சி பங்களிப்புச் செய்த விதத்தை அதற்குரிய இரு புதிய கண்டுபிடிப்புக்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. கைத்தொழில் புரட்சி காரணமாகப் பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களை விபரிக்க. (6 புள்ளிகள்)

10)
1. 1ம் உலக யுத்தத்திற்கான காரணங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
2. இரண்டாம் உலக யுத்தத்தில் ஈடுபட்ட நேசநாடுகள் இரண்டையும் அச்சு நாடுகள் இரண்டையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. முதலாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் இரு அரசியல் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, ஜேர்மனியின் நடவடிக்கை இரண்டாம் உலகப் போர் உண்டாவதற்கு ஏதுவான விதத்தை இரு விடயங்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. 2ம் உலக யுத்தத்தின் பின்னர் ஐ. நா. சபை உலக நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குச் செயற்படும் விதத்தை மூன்று உதாரணங்களைக் கொண்டு குறிப்பிடுக. (6 புள்ளிகள்)